# மெட்ரோ ரயில் பயணிகள் எண்ணிக்கை கணிசமாக உயர்வு

**சென்னை, ஜூலை 20-**
சென்னையில் கொரோனா பரவலுக்கு முன்பாக மெட்ரோ ரயில் சேவையை நாள் தோறும் 1 லட்சம் பேர் வரையில் பயன்படுத்தி வந்தனர். வண்ணாரப்பேட்டை- விம்கோநகர் வரையிலான நீட்டிப்பு சேவை அதிக வரவேற்பை பெற்றது. இந்தநிலையில், கொரோனா தாக்கம் தொடங்கியது முதலே மெட்ரோ ரயில் சேவையில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. அரசின் கொரோனா கட்டுப்பாடுகள் மூலம் மெட்ரோ ரயில்கள் இயக்குவது அடிக்கடி நிறுத்தப்பட்டு வந்தது. இந்தநிலையில், கொரோனா 2ம் அலையின் தாக்கம் குறைந்து வருவதால் ஊரடங்கில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பொது போக்குவரத்து மற்றும் சென்னையில் மெட்ரோ ரயில் சேவைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. கொரோனா அச்சம் காரணமாக ஆரம்பத்தில் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனால், தற்போது மெட்ரோ ரயிலில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளதாக மெட்ரோ ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் கூறியதாவது:

கொரோனா அச்சம் காரணமாக நாள்தோறும் 15 ஆயிரம் பேர் வரை மட்டுமே மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தி வந்தனர். இந்தநிலையில், தீவிரமான தடுப்பு நடவடிக்கைகள் மூலம் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன்படி, நாள் தோறும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மெட்ரோ ரயிலில் பயணம் செய்கின்றனர். கடந்த 16ம் தேதி அதிகபட்சமாக 69,794 பேர் பயணம் செய்துள்ளனர். இதேபோல், ஜூன் 21ம் தேதி முதல் ஜூலை 16ம் தேதி வரையில் 12, 37, 552 பேர் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தியுள்ளனர்.

இது வரக்கூடிய நாட்களில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் இது தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. முகக்கவசம் அணியாத மற்றும் சரியாக அணியாத 46 பயணிகளிடமிருந்து இதுவரை 9,200 ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. அபராதம் வசூலிப்பது மெட்ரோ ரயில் நிர்வாகத்தின் நோக்கம் அல்ல. எனவே, பயணிகள் அரசின் கொரோனா தடுப்பு வழிமுறைகளை சரிவர கடைபிடித்து ஒத்துழைப்பு தர வேண்டும்.

இவ்வாறு கூறினார்.